# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS.No.**170/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு. முருகானந்தம் | ஊர் | : | காவேரி நகர் |
| த.பெ. | : | திரு.சிவஞானம் | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 55 | தொழில் | : | டாஸ்மார்க் கடை மேலாளர் |

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ஆம் நாள் **பி.சா.1 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.31.3.2008 இல் எனது அப்பா எனக்கு உயில் எழுதி கொடுத்தார் அதன் நகல் எதிருரையுடன் தாக்கல் செய்துள்ளேன் தற்போது அசல் தாக்கல் செய்கிறேன் அந்த அசல் **பி.சா.ஆ.1** ஆகும். 21.11.1996 தேதியிட்ட அண்ணன் ஜனார்த்தன் பெயரிலுள்ள கிரைய பத்திரம் சான்று நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.2** ஆகும். அவர் பெயரிலுள்ள TSLR ஆவண நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.3** ஆகும். 21.11.1996 தேதியிட்ட என் பெயரிலுள்ள கிரைய பத்திரம் சான்று நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.4** ஆகும். 30.5.2005 தேதியிட்ட என் அம்மா என் பெயருக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் சான்று நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.5** ஆகும். 29.12.2021 தேதியிட்ட என் பெயரிலுள்ள TSLR நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.6** ஆகும். 17.3.2026 தேதியிட்ட என் பெயரிலுள்ள சொத்து வரி நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.7** ஆகும். 17.3.2026 என் பெயரிலுள்ள குடிநீர் வரி ரசீது தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.8** ஆகும். என்பெயரிலுள்ள பாதாள

சாக்கடை திட்ட ரசீது  தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.9** ஆகும்.  15.6.2025 தேதியிட்ட என் பெயரிலுள்ள மின்கட்டண ரசீது  தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.10** ஆகும்.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோள்படி ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என்  முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.17 17:06:36 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**